செ.வெ. எண்: 779 நாள்: 23.12.2011

# பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி பொது விநியோகத்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள 1.85 கோடி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் விலையில்லா அரிசியும், மானிய விலையில் பருப்புவகைகள், பாமாயில் போன்ற பொருட்களும் தரமான முறையில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் சீரான முறையில் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி 23.12.11 அன்று அண்ணா நகர் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக கிடங்கில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் இரா. காமராஜ் அவர்கள் திடீர் ஆய்வு செய்தார்.

அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் தரமாக உள்ளனவா என்று மாதிரி எடுத்து அமைச்சர் பரிசோதனை செய்து தரம் பற்றி உறுதி செய்து கொண்டார். மூன்று மாதத்திற்கு தேவையான அரிசி, ஆறு மாத தேவைக்கான கோதுமை, இரண்டு மாத தேவைக்கான சர்க்கரை, பருப்பு, பாமாயில் இருப்பு உள்ளதையும் கேட்டறிந்தார். பொங்கல் பண்டிகைக்கு போதுமான அளவு பச்சரிசி கையிருப்பில் உள்ளதையும் அமைச்சர் உறுதி செய்து கொண்டார்.

கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகை கால விடுமுறை தினங்களையொட்டி டிசம்பர்'11 மாத இயக்கம் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அனைத்து கூட்டுறவு அங்காடிகளுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் நகர்வு செய்ய ஏதுவாக 24.12.2011 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார். கிடங்குகள் வளாக சுற்றுப்புற தூய்மையையும், கிடங்குகளின் உள்ளே பூச்சிகள் மற்றும் சிறு வண்டுகள் இல்லாதபடி தரக்கட்டுப்பாட்டுப் பணிகள் தொய்வின்றி நடைபெற வேண்டுமெனவும் தரக் கட்டுப்பாட்டு அலுவலர்களை அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும் அருகில் உள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகத்தினால் நிர்வகிக்கப்படும், அமுதம் நியாயவிலைக் கடை எண் FA 022–ல் உள்ள அத்தியாவசியப் பொருட்கள் அரிசி உளுந்தப்பருப்பு, துவரம்பருப்பு, பாமாயில், சர்க்கரை ஆகியவை, அக்கடைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்றும், உணவுத்துறை ஆணையாளரின் மாதாந்திர ஒதுக்கீட்டுப்படி நகர்வு செய்யப்பட்டு இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்றும் மாத இறுதியிலும் போதிய கையிருப்பு உள்ளதா என்ற விவரங்களை, அமைச்சர் உரிய பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்து கண்டறிந்தார். மேலும் அங்காடியிலுள்ள மின்னணு எடைத்தராசு மற்றும் விற்பனை பட்டியல்கள் தயாரிக்கும் மின்னணு கருவி ஆகியவை முறையாக பாரமரிக்கப்பட வேண்டுமென அமைச்சர் அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் முனைவர் டி. கார்த்திகேயன், இஆப,. பொது மேலாளர் கோதண்டராமன், முதுநிலை மண்டல மேலாளர் மனோகரன், தரக்கட்டுப்பாடு மேலாளர் ரகுநாதன், சேமிப்பு அலுவலர் சுப்பராயலு ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**